சைதை சா. துரைசாமியின் மனிதநேயம்
ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்
எண்:28, முதல் பிரதானசாலை, சி.ஐ.டி.நகர், சென்னை - 600035.
போன் : 044 - 2435 8373, 24330095
Email:manidhanaeyam@gmail.com Website: www.mntfreeias.com

# 2023-ஆம் ஆண்டு சிவில் சர்வீசஸ் (UPSC) முதன்மைத் தேர்வில் மனிதநேய பயிற்சி மைய மாணவ, மாணவியர் 41 பேர் தேர்வு. 20 மாணவர்கள் மற்றும் 21 மாணவிகள் தேர்ச்சி பெற்றனர்.

நாள் : 09.12.2023

திரு.சைதை துரைசாமி, திருமதி மல்லிகா துரைசாமி, திரு.வெற்றி துரைசாமி மற்றும் திருமதி வசுந்தரா வெற்றி ஆகியோரால் சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு கடந்த 2005ஆம் ஆண்டு "மனிதநேய அறக்கட்டளை" தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமூகப் பணிகளைச் செய்து வருகிறது. இந்த அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்படும் சைதை துரைசாமியின் மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகத்தில் பயிற்சி பெற்று வெற்றி பெற்ற பல மாணவ – மாணவியர்கள் அரசுப் பணி பெற்றுள்ளனர்.

"மனிதநேயம் ஐஏஎஸ் கட்டணமில்லா கல்வியகம்" மூலம், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மாணவ-மாணவியர்களும் இந்திய அளவில் உயர்பதவிகளான ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவற்றிற்கு தேர்வு செய்யப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு கடந்த 17 ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐஎப்.எஸ், ஐஆர்எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப் -I, II, IIA (DC, DSP, DRO, DEO, CTO), SUB-INSPECTOR, A.E (HIGHWAYS, RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ, PWD (CIVIL, ELECTRICAL) போன்ற பதவிகளுக்கும் இதுவரை 3708க்கும் மேற்பட்ட மாணவ-மாணவியர்கள் வெற்றி பெற்று மாநில மற்றும் தேசிய அளவிலும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய பணியாளர் ஆண்டுதோறும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ், ஐ.ஆர்.எஸ் மற்றும் பிற மத்திய அரசு பணிகளுக்கான தேர்வினை நடத்தி வருகிறது. முதல்நிலை தேர்வு, முதன்மை தேர்வு மற்றும் நேர்முக தேர்வு ஆகிய மூன்று நிலைகளை கொண்டது இந்த தேர்வு ஆகும்.

குரூப்-4 (VAO, Junior Assistant - Security, Non Security, Bill Collector - Grade - 1, Field Sureyor, Draftsman, Typist, Steno-Typist) போன்ற பதவிகளில் இதுவரை 36,000-க்கும் மேற்பட்டவர்கள் 170 சாதி பிரிவுகளில் வெற்றி பெற்று பணியில் உள்ளனர்.

மத்திய பணியாளர் தேர்வாணையம் (UPSC) 2023-ம் இந்த ஆண்டுக்கான ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் உள்ளிட்ட மொத்தம் 1105 காலிப் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, 01.02.2023 அன்று அறிவிப்பு வெளியிட்டது. முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்தியா முழுவதும் அனைத்து தேர்வர்களும் வீட்டில் இருந்தபடியே ஐ.ஏ.எஸ் தேர்விற்கு பயிற்சி பெறும் வகையில், UPSC முதல்நிலைத் தேர்விற்கான பயிற்சியை, இந்தியாவிலேயே முதல்முறையாக தொலைக்காட்சி வாயிலாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

1. இணையத்தின் வாயிலாக பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும், சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு தேர்வர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட காணொளி காட்சி பதிவுகள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

...2

2. முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற தேர்வர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படுகிறது.

3. முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற தேர்வர்களுக்கு சிறந்த பயிற்சியாளர்களின் மூலம் குறிப்புகள், கையேடுகள், தினசரி தேர்வுகள் மற்றும்,

4. முதன்மைத் தேர்விற்கு பயின்ற தேர்வர்களுக்கு நடத்தப்படும் தேர்வுகளுக்கு உடனுக்குடனான மதிப்பீடுகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

இவ்வாறான பயிற்சிகள் மூலம் தேர்வர்கள் எளிதில் தேர்ச்சி பெறும் வாய்ப்பை பெற்றனர்.

இந்த வருடம் செப்டம்பர் மாதம் 15, 16, 17.09.2023 முதல் 23, 24.09.2023 வரையிலும் வரை முதன்மைத் தேர்வு நடைபெற்றது.

முதன்மைத் தேர்வில் கலந்து கொண்ட மாணவ, மாணவியருக்கு சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் திரு. சைதை துரைசாமி நடத்தி வரும் மனிதநேய ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா பயிற்சி மையம் மூலம் மதிய உணவு வழங்கப்பட்டது.

முதன்மைத் தேர்வின் முடிவு 08.12.2023 அன்று வெளியிடப்பட்டது. இதில் மாணவர்கள் 20 பேரும், மாணவிகள் 21 பேரும் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு மனிதநேய அறக்கட்டளையின் நிறுவன தலைவர் திரு. சைதை துரைசாமி அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்.

முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் மாதிரி நேர்முகத் தேர்வுக்கான பயிற்சி, மனிதநேய ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா பயிற்சி மையத்தில் இலவசமாக நடத்தப்பட உள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ, மாணவிகள் சமீபத்தில் எடுக்கப்பட்ட தங்களுடைய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் முதன்மைத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டு ஆகியவற்றுடன் 09.12.2023 முதல், சிஐடி நகரில் உள்ள மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா பயிற்சி மையத்தில் நேரிலோ, போன் மூலமாக 044 – 2435 8373, 2433 0095, 84284 31107 பதிவு செய்து கொள்ளலாம்.

நேர்முகத் தேர்வுக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளுக்கு, கீழ்க்கண்ட வசதிகள் அனைத்தும் எந்தவித கட்டணமுமின்றி வழங்கப்படும்.

1. நேர்முகத் தேர்விற்காக சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி

2. குறிப்புகள், கையேடுகள் மற்றும் தினசரி வகுப்புகள்

3. தேர்வர்களுக்கு தனிப்பட்ட வழிகாட்டுதல்

4. நேர்முகத் தேர்வில் பங்கு பெறுபவர்கள் டெல்லி சென்று வருவதற்கு விமான பயணச்சீட்டும், புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கும், உணவிற்கும் மற்றும் மாணவர்களுக்கு தரமான காலணிகள், கோட் சூட், மாணவிகளுக்கு புடவை, சுடிதார், காலணிகள் என அனைத்து உதவிகளும் எந்தவித கட்டணமுமின்றி வழங்கப்படும்.

மேற்கண்ட தகவல்களை மனிதநேய அறக்கட்டளையின் நிறுவன தலைவர் திரு.சைதை துரைசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்.

>>>>>>>>>>>>>>>>>>>> <<<<<<<<<<<<<<<<<<